பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
100, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை– 600 028

ஸ்டார் 3.0–திட்டம் ஸ்பிரிண்ட் –1

சுற்றறிக்கை எண் 9644/சிஎஸ்1/25, நாள் 22.01.2026

பொருள்: ஸ்டார் 3.0 ஸ்பிரிண்ட் 1 ஆவணப்பதிவு – காகிதமில்லா, நேரில் வருகையில்லா ஆவணப்பதிவு உட்பட பொதுமக்கள் நலனுக்காக புதிய சேவைகள் – மென்பொருள் அமல்படுத்துதல் – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக

பார்வை: அரசாணை எண் 73 வ.வ.துறை(யூ2), நாள் 12–7–2023

****

பார்வையில் கண்ட அரசாணை வழி ஸ்டார் 3.0 திட்ட செயலாக்கத்திற்கு உரிய ஆணைகள் பெறப்பட்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக, ஸ்டார் 3.0 ஸ்பிரிண்ட் 1–ல் உள்ளடக்கிய காகிதமில்லா ஆவணப்பதிவு, நேரடி வருகையில்லா ஆவணப்பதிவு, தானியங்கி பத்திர உருவாக்கம், புலனவழி தகவல் தொடர்பு, கைபேசி செயலி, மையக்கணினி வழி சான்றிட்ட நகல் வழங்குதல், மேம்படுத்தப்பட்ட வில்லங்கச்சான்று வழங்குதல், விரைவுக்குறியீட்டுடன் கூடிய புதிய குறுபணப்பரிவர்த்தனை (QR Code Based Payment) ஆகிய சேவைகளுக்கு புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டது. இது தொடர்பாக மாவட்டத்திற்கு ஒரு அலுவலகம் வீதம் தேர்வு செய்யப்பட்டு சோதனை அடிப்படையில் பணியாளர்களுக்கு போதுமான பயிற்சி வழங்கப்பட்டு, அதனைத்தொடர்ந்து 21.01.2026 அன்று அனைத்து பணியாளர்களுக்கும் ஸ்டார் 3.0 ஸ்பிரிண்ட்–1 விளக்கக் கூட்டம் இணையவழியில் நடத்தப்பட்டு, போதிய விளக்கமும் அளிக்கப்பட்டது.

Verified RedEstate ™

இத்திட்டமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.01.2026 அன்று துவக்கிவைக்கப்பட்டு நடைமுறைக்கு வந்ததை கருத்தில் கொண்டு கீழ்க்கண்டவாறு அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

1. காகிதமில்லா ஆவணப்பதிவு (Paperless Registration)

சொத்தினை எழுதிக்கொடுப்பவர் மற்றும் எழுதி வாங்குபவரின் அடையாளமானது ஆதார் வழி பெறப்பட்ட குறுஞ்செய்தி (OTP) அல்லது விரல் ரேகை வழி சரிபார்க்கப்படுவதுடன், ஆவணத்தை எழுதி பதிவுத்துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து ஆன்லைன் வழி பணம் செலுத்தி சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட ஆவண விபரங்கள் சரியாக இருக்கும் பட்சத்தில், ஆவணதாரர் மற்றும் தேவைப்படும் நேர்வுகளில் சாட்சிகள் சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலத்தில் நேரில் ஆஜராகி கைரேகை மற்றும் புகைப்படம் எடுக்கப்பட்டு பதிவு செய்து, சார்பதிவாளரின் மின்னணு கையொப்பம் இடப்பட்டு மின்னணு ஆவணமாக இணையதள வழி பொதுமக்களுக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்க சார்பதிவாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். இம்முறையின் மூலம் அனைத்து வகையான ஆவணங்களும் (All Type of Deeds) பதிவு செய்யப்படும் என்பதை பொதுமக்கள் அறியும் வண்ணம் சார்பதிவாளர்கள் அலுவலக விளம்பர பலகையில் விளம்பரம் செய்திடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும் காகிதமில்லா ஆவணப்பதிவு முறையில், முத்திரைத்தாட்கள் அல்லது இ-ஸ்டாம்ப் பயன்படுத்தி ஆவணம் பிரிண்ட் எடுக்கப்பட்டு மேலேற்றம் செய்யப்பட்டு, முத்திரைத்தாள் எண்கள் உள்ளீடு செய்யப்பட்டு, ஆவணம் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் நிகழ்வுகளில் ஆவணம் தாங்கிய முத்திரைத்தீர்வையை கணக்கில் கொண்டு, ஆவணம் பதிவு செய்யப்பட்ட உடன் அசல் முத்திரைத்தாளில்

Verified RealEstate ™

முன்பக்கத்தில் கீழ்க்கண்ட முத்திரையை இட்டு ஆவணத்தாரரிடம் திரும்ப வழங்க அறிவுறுத்தப்படுகிறது. இம்முத்திரையின் அளவு 10செ.மீX4 செ.மீ ஆக இருக்க வேண்டும்.

இந்த முத்திரைத்தாளானது _____ பதிவு மாவட்டம் _____ சார்பதிவாளர் அலுவலகம் _____வருடம் _____எண் காகிதமில்லா பதிவு ஆவணத்திற்கு பயன்படுத்தப்பட்டது.

சார்பதிவாளர் அலுவலகத்தில் காகிதமில்லா ஆவணப்பதிவில் பயன்படுத்தப்பட்ட முத்திரைத்தாள்களின் விவரங்கள் அடங்கிய பதிவேடு கீழ்க்கண்ட கலங்களுடன் பராமரிக்கப்பட வேண்டும்.

பதிவேட்டின் தலைப்பு : காகிதமில்லா ஆவணப்பதிவில் பயன்படுத்தப்பட்ட முத்திரைத்தாள்களின் விவரங்கள் அடங்கிய பதிவேடு

வ. எண்	ஆவண எண்/நாள்	முத்திரைத்தாள் வாங்கியவர் பெயர்	முத்திரைத்தாள் எண்	முத்திரைத்தாள் முக மதிப்பு	முத்திரைத்தாள் விற்பனையாளர் பெயர்/ உரிமம் எண்.	முத்திரைத்தாள் வாங்கிய நாள் / மாவட்டம்	முத்திரைத்தாள் ஆவண தாரருக்கு திரும்ப வழங்கிய நாள்	சார்பதிவாளர் சுருக்கொப்பம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)

2. நேரடிவருகையில்லா ஆவணப்பதிவு (Presenceless Registration)

கட்டுமான நிறுவனத்திடமிருந்து புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை வாங்கும் போதும், புதிதாக உருவாக்கப்பட்ட மனைப்பிரிவுகளிலிருந்து மனைகளை மட்டும் வாங்கும் போதும் முதல் கிரைய ஆவணத்தைப் பொருத்து (First Sale) பொதுமக்கள் தங்கள் வீட்டிலிருந்தோ அல்லது சம்பந்தப்பட்ட சொத்தை விற்பனை

Verified PedEstate™

செய்யும் நிறுவனத்தின் அலுவலகத்திலிருந்தோ பத்திரத்தை இணையதள வழியாக பதிவுக்கு தாக்கல் செய்யலாம். மேலும், விற்பனை உடன்படிக்கை (Sale Agreement), குத்தகை ஆவணம் (Lease Deed / Agreement of Lease), உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு ஆவணம் (Deposit of Title Deeds), இரசீது ஆவணம் (Deed of Receipt), சுவாதீனத்துடன் கூடிய அடைமான ஆவணம் (Mortgage with Possession Deed), சுவாதீனமில்லா அடைமான ஆவணம் (Mortgage without Possession Deed), சுவாதீனத்துடன் கூடிய மேல் ஈடு ஆவணம் (Further Charge Mortgage with Possession Deed), சுவாதீனமில்லா மேல் ஈடு ஆவணம் (Further Charge Mortgage without Possession deed), அறக்கட்டளை ஆவணம் (Deed of Trust) ஆகிய ஆவணங்களையும் பொதுமக்கள் நேரடி வருகையில்லா ஆவணப்பதிவின் வாயிலாக இணைய வழியே பதிவுக்கு தாக்கல் செய்யும் போது, சொத்தினை எழுதிக்கொடுப்பவர் மற்றும் எழுதி வாங்குபவர்களின் அடையாளமானது விரல் ரேகை ஆதார் ஆணையத்துடன் சரிபார்க்கப்பட்டு, ஆன்லைன் வழி கட்டணம் செலுத்திய உடன், சமர்ப்பிக்கப்பட்ட ஆவண விபரங்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் ஆவணம் உடனுக்குடன் பதிவு செய்து, சார்பதிவாளரின் மின்னணு கையொப்பம் இடப்பட்டு மின்னணு ஆவணமாக இணையதள வழி பொதுமக்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

3. அரசு வாரியங்களால் எழுதிக்கொடுக்கப்படும் ஆவணங்கள் நேரடி வருகையில்லா ஆவணப்பதிவு (Presenceless Registration for Documents by Government Organizations)

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் போன்ற அரசு வாரியங்களால், பொதுமக்களுக்கு எழுதிக்கொடுக்கப்படும் அனைத்து வகையிலான ஆவணச் சொத்துக்களுக்கு, பொதுமக்கள் சார்பதிவாளர் அலுவலகம் வராமல் சம்பந்தபட்ட வாரிய அலுவலகத்திலிருந்தே பத்திரத்தை பதிவுக்கு தாக்கல் செய்து பதிவு செய்யப்பட்ட

Verified RealEstate

பத்திரத்தை உடனே வாரிய அலுவலகத்திலிருந்தே தரவிறக்கும் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அரசு நிறுவனங்களால் இணையவழியில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவண விபரங்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் ஆவணம் உடனுக்குடன் பதிவு செய்து, சார்பதிவாளரின் மின்னணு கையொப்பம் இடப்பட்டு மின்னணு ஆவணமாக இணையதள வழி பொதுமக்களுக்கு அன்றைய வேலைநேரத்திற்குள் சார்பதிவாளர்கள் அனுப்பி வைக்க வேண்டும்.

மேலே தெரிவிக்கப்பட்ட வரிசை எண். 2, 3 ஆவணங்களைப் பொறுத்து சார்பதிவாளர்கள் அன்றைய வேலை நேரத்திலேயே பதிவு செய்வதோ அல்லது நிலுவை வைப்பதோ அல்லது பதிவு மறுத்தளிப்பதோ (Refusal) அல்லது திருத்தம் செய்ய திரும்ப அளிப்பதோ (Return) போன்ற நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். தவறும்பட்சத்தில் அடுத்த வேலை நாளில் சார்பதிவாளர்களால் வழக்கமான ஆவணப்பதிவு மேற்கொள்ள இயலாத வகையில் மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது. முன்னர் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களைப் பரிசீலினை செய்த பின்னரே வழக்கமான ஆவணப்பதிவினை தொடர இயலும்.

மேலும் வரிசை எண்.1, 2 மற்றும் 3-முறைகளின் அடிப்படையில் சார்பதிவாளரால் மின்னணு சான்றிடப்பட்ட ஆவணம் மற்றும் ரசீது-யை ஆவணதாரர் / அரசு வாரிய நிறுவனங்களில் உருவாக்கப்பட்ட உள்நுழைவு / இணையவழி (Login/Email)-ல் 60 நாட்களுக்குள் தரவிறக்கம் செய்து அச்சுப்பிரதி எடுத்து கொள்ளும் வகையில் மென்பொருளில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 60 நாட்களுக்கு பிறகு ஆவணதாரர்/அரசு வாரிய நிறுவனங்கள் தங்களது ஆவணங்களை சான்றிட்ட நகல் வழி விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம். இது தொடர்பான ஆவணங்களின் ரசீதுகளை அச்சுப்பிரதி எடுத்து கோர்வை செய்து பராமரிக்க வேண்டும்.

Verified RealEstate

எனவே, மேற்கண்ட முறைகளில் ஆவணத்தை பதிவு செய்யும் சார்பதிவாளர்கள் வழக்கமான பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கைகளை பின்பற்றி செயல்பட அறிவுறுத்தப்படுகிறது.

4. எந்த நேரத்திலும் மற்றும் எந்த இடத்திலும் இருந்து ஆவணம் சமர்ப்பிக்கும் வசதி (Any–Time and Any–Where application submission)

நேரடி வருகையில்லா ஆவணப்பதிவு வசதி வாயிலாக பொதுமக்கள் இந்திய எல்லைக்குட்பட்ட எந்த இடத்தில் இருந்தும் எந்த நேரத்திலும் (24x7x365) அனைத்து நாட்களிலும் ஆவணங்களை தயார் செய்து சமர்ப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

5.தானியங்கி பத்திர உருவாக்கம் (Automatic Deed creation)

பொதுமக்கள் பிறர் உதவியின்றி தங்களின் ஆவணத்தை தாங்களே உருவாக்கும் வண்ணம் தானியங்கி பத்திரம் உருவாக்கும் வசதியானது கிரைய ஆவணம் (Sale Deed), கிரைய உடன்படிக்கை ஆவணம் (Sale Agreement), உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு ஆவணம் (Deposit of Title Deeds), இரசீது ஆவணம் (Deed of Receipt) ஆகிய ஆவணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கேள்வி, பதில் வடிவிலான இந்த மென்பொருளில் பொதுமக்கள் தங்கள் சொத்து தொடர்பான குறைந்த பட்ச விபரங்களை அளித்த உடனேயே தானாகவே பத்திரம் உருவாகிவிடும். அதனை காகிதமில்லா ஆவணப்பதிவு முறையிலோ அல்லது அச்சுப்பிரதி எடுத்து வழக்கமான பத்திரப்பதிவு முறையிலோ பதிவு செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பொதுமக்களால் உருவாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள், சரியாக இருக்கும் பட்சத்தில் ஆவணம் உடனுக்குடன் பதிவு செய்து, சார்பதிவாளரின் மின்னணு கையொப்பம் இடப்பட்டு மின்னணு ஆவணமாக இணையதள வழி அல்லது வழக்கமான பத்திரப்பதிவு

Verified by RegiEstate

முறையிலோ, ஆவணங்களை திரும்ப வழங்க வேண்டும். இவ்வாறு தானியங்கி பத்திர உருவாக்க முறையில் ஆவணம் உருவாக்கப்பட்டு, வழக்கமான பத்திரப்பதிவு முறையில் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் பட்சத்தில் பொதுமக்களே உருவாக்கும் ஆவணத்திற்கு "ஆவணம் உருவாக்கியவர் –Self" என்று கையொப்பம் செய்து தாக்கல் செய்யலாம் என பதிவுத்துறைத் தலைவர் ஏற்கனவே சுற்றறிக்கை வாயிலாகத் தெரிவித்துள்ளதைக் கருத்தில் கொண்டு செயல்பட அறிவுறுத்தப்படுகிறது. (பதுத சுற்றறிக்கை எண். 25/S2/2010 நாள். 21.06.2010)

6.தரம் உயர்த்தப்பட்ட இணையதளம்

தங்களுக்கு தேவையான சேவைகளை பொதுமக்கள் எளிதில் அடையாளம் கண்டுகொண்டு பயன்படுத்தும் வகையில் இணையதள சேவைகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த எளிய வடிவமைப்பின் வழி பொதுமக்கள் பதிவுத்துறையின் எந்த சேவைகளையும் எளிதாக பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே இணையதள வழி எளிதாக பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளுக்கு பொதுமக்கள் நேரில் அலுவலகம் வரத்தேவையில்லை என்ற விபரத்தை பொதுமக்கள் அறியும் வண்ணம் அலுவலக விளம்பர பலகையில் விளம்பரம் செய்திடுமாறு சார்பதிவாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

7.ஒருங்கிணைந்த முகப்பு அட்டை மற்றும் விரைவுக்குறியீட்டின் (QR Code Based Payment) வழி பணம் செலுத்தும் முறை

தற்போது உள்ள ஆன்லைன் கட்டண வசதியுடன் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பதிவுக்கு வந்த பின்னர் ரூ.1000/–க்கும் குறைவாக பணம் செலுத்த வேண்டிய நிகழ்வுகளில், கூடுதல் வசதியாக பாரத ஸ்டேட் வங்கியால் வழங்கப்பட்ட குறுபணப்பரிவர்த்தனை இயந்திர (Point of Sales) விரைவுக்குறியீட்டின் (QR code with UPI) வழி கட்டணம் செலுத்தும் வசதி

Verified RealEstate™

ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனை பொதுமக்களுக்கு தெரிவித்து தேவைப்படும் நிகழ்வுகளில் பயன்படுத்திக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

8. பதிவுப்பணியினை பொதுமக்கள் பார்வையிடும் திரை

ஆவணப்பதிவின் போது பொதுமக்களின் விரல் ரேகை மற்றும் புகைப்படம் எடுக்கப்படும் போது, பதிவுப்பணியினை பொதுமக்களே பார்வையிடும் வண்ணம், 27 அங்குலம் கொண்ட பெரிய திரை வசதி அனைத்து சார்பதிவாளர் அலுவலகத்திலும் நிறுவப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் ஆவணத்தில் தங்களின் புகைப்படம் தெளிவாக இருப்பதை உறுதி செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

9. அடுக்குமாடி குடியிருப்பு மறு விற்பனை ஆவணங்களை கட்டடக்களப்பணியின்றி அன்றே திரும்ப வழங்கும் வசதி

அடுக்குமாடி குடியிருப்புகளை மறுவிற்பனை செய்யும் போது, கட்டுமான விபரங்களுடன் கார் பார்க்கிங் மற்றும் லிஃப்ட் போன்ற வசதிகள் இருப்பதாக தெரிவிக்கப்படும் ஆவணத்தைப் பொறுத்து, கட்டிட கள ஆய்வின்றி, கட்டணங்களை கணக்கீடு செய்து பதிவு செய்த அன்றே ஆவணங்களைத் திருப்பித் தரும் வகையில் மென்பொருள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே, அடுக்குமாடி குடியிருப்பு மறு விற்பனை ஆவணங்களில் மேற்குறிப்பிட்டுள்ள கார் பார்க்கிங் மற்றும் லிப்ட் போன்ற வசதிகள் இருப்பதை உறுதி செய்து ஆவணங்களை அன்றே திரும்ப வழங்க சார்பதிவாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

10.மையக்கணினியின் மின்னணு கையொப்பமிட்டு சான்றிட்ட நகலை உடனுக்குடன் தன்னிச்சையாக வழங்கும் வசதி

பொதுமக்கள் சொத்துப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் கோரி இணையதளம் மூலம் மனு மற்றும் கட்டணத்தை செலுத்திய உடனே மையக்கணினி வழி மின்னணு கையொப்பமிடப்பட்டு ஆவணத்தின் சான்றிட்ட நகல் வழங்கப்படும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களுக்கு ஆவணத்தின் சான்றிட்ட

Verified © RealEstate ™

நகல்கள் உடனுக்குடன் வழங்கப்படுவதுடன் சார்பதிவாளர்களின் பணிப்பளு குறையும்.

11.சான்றிட்ட பிற நகல்கள்

வெளிநாடுகளில் வசிப்பவர்களால் எழுதிக்கொடுக்கப்பட்டு, சார்பதிவாளர்களால் முத்திரைத்தீர்வை சான்று செய்யப்பட்ட பொது அதிகார ஆவணங்கள் (Adjudicated Power of Attorney), நீதிமன்ற ஆணைகள் (Court Order), கடன் ஆணைகள் (Loan Order), குறிப்பாணைகள் (Memo) மற்றும் இசைவு தீர்ப்பு (Awards) ஆகிய ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை ஆன்லைன் வழி பெறும் புதிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

12.சொத்து தொடர்பான பரிவர்த்தனைகளை எளிய வழியில் வில்லங்கச்சான்றில் தேடுதல்

அ) **முன் ஆவணவழி தேடுதல் (Previous Document Based Search)**

ஓர் ஆவணத்தின் பதிவு எண்ணை கொடுத்து தேடுதல் மேற்கொள்ளும் போது, அதனுடன் தொடர்புடைய அனைத்து முன்பதிவு ஆவணங்களும் பின்பதிவு ஆவணங்களும் வில்லங்கச்சான்றில் வரும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் ஒரு குறிப்பிட்ட சொத்து தொடர்புடைய ஆவணங்கள் மட்டும் வில்லங்கச்சான்றில் பிரதிபலிப்பதால், தொடர் பரிவர்த்தனைகளை ஒருங்கே அறிய முடிவதுடன், தற்போதைய உரிமையாளர் விபரத்தை எளிதாக அறிய முடியும்.

ஆ) **வருவாய் கிராம வாரியாக தேடுதல்**

பொதுவாக பொதுமக்கள் எளிதில் அறிந்திருக்கும் வருவாய் மாவட்டம், வருவாய் வட்டம் மற்றும் வருவாய் கிராமம் ஆகியவற்றினை

Verified © RedEstate™

உள்ளீடு செய்தும் சொத்துப் பரிவர்த்தனை விபரங்களை தேடும் வசதி கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இ) **கிராமத்தின் சார்பதிவாளர் அலுவலக எல்லை மாறினாலும் ஒரே வில்லங்கச்சான்று**

ஒரு கிராமமானது ஒரு சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து வேறு ஒரு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நிர்வாக நலன் கருதி மாற்றம் செய்யப்பட்டு, ஆவணங்கள் வெவ்வேறு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவகத்தைப் பொறுத்தும் தனித்தனியாக வில்லங்கச்சான்று வழங்கப்பட்ட நிலையை மாற்றி ஒரு கிராமத்தைப் பொறுத்து ஒரே ஒரு கணினி கட்டணத்துடன் ஒரே வில்லங்கச்சான்றாக வழங்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இனிவரும் காலத்தில் ஒரு கணினி கட்டணம் மட்டும் செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதை கவனத்தில் கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

13.கைபேசி செயலி (TNREGINET APP)

"TNREGINET" என்ற மேம்படுத்தப்பட்ட கைபேசி செயலி வழியாக வழிகாட்டி மதிப்பு, வில்லங்கச்சான்று, டோக்கன் நிலை, அதிகார எல்லை, ஆவணத்தின் நிலை, கட்டிடத்தின் மதிப்பு கணக்கீடு, முத்திரைத்தாள் விற்பனையாளர் விவரம், ஆவண எழுத்தர் விவரம், சங்கப்பதிவு விபரம், திருமண விவரம், கூட்டு நிறுவனம், சீட்டு நிறுவனம் ஆகியவற்றை எளிதாக அறியும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

14.புலனவழி செய்தி அனுப்புதல் (WhatsApp Based Communication)

தற்போது குறுஞ்செய்தி வழியாக மட்டும் அனுப்பப்படும் வசதியை மேம்படுத்தி, பதிவுத்துறையின் வெவ்வேறு சேவைகளின் நிலை தொடர்பாக புலனம் வழியாகவும் செய்தி அனுப்பும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

Verified RealEstate TM

15.<u>தமிழ்நாடு அடுக்குமாடி குடியிருப்பு உரிமை சங்கம் பதிவு</u>

தமிழ்நாடு அடுக்குமாடி குடியிருப்பு உரிமை சட்டம், 2022 (ACT No. 44 OF 2022)–ன் படி பதிவு செய்யப்பட வேண்டிய அடுக்குமாடி குடியிருப்பு உரிமை சங்கம் தொடர்பான புதிய மென்பொருள் வசதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் வழி சங்கத்தினர், மாவட்டப்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் வராமலேயே தாங்கள் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்பு சங்கத்தைப் பதிவு செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.(End to End Software)

<u>16.மேலாண்மை தகவல் அமைப்பு (MIS)</u>

பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை திறம்பட நிர்வகிக்க ஏதுவாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை அன்றன்றே திரும்ப வழங்குதல், வருவாய் விபரம், டோக்கன் பதிவு செய்யப்பட்ட விபரம், நிலுவை ஆவணங்கள் எண்ணிக்கை போன்ற அறிக்கைகளை எப்போதும் (24x7x365) அனைத்து நிலை அலுவலர்களும் கண்காணித்து சேவைகளின் தரத்தை மேம்படுத்தும் வண்ணம் மென்பொருள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி அறிக்கைகளில் தனிக்கவனம் செலுத்த மாவட்டப்பதிவாளர்கள் / துணைப்பதிவுத்துறைத்தலைவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

<u>17.மேம்படுத்தப்பட்ட திருமணப் பதிவுத் தகவல்கள் தேடுதல்</u>

திருமண பதிவு எண் வாரியாகவும் அல்லது மணப்பெண் / மணமகனின் பெயர் மற்றும் பிறந்த தேதி ஆகிய ஏதேனும் ஒருவர் விபரத்தை உள்ளீடு செய்து தேடி அது தொடர்பான திருமண விபரங்களை பெறும் வண்ணம் மென்பொருளில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

Verified by RedEstore™

18. 2 MBPS வேகத்திலிருந்து 4 MBPS வேகத்திற்கு தர மேம்பாடு

பி எஸ் என் எல் நிறுவனத்தால் வழங்கப்படும் முதன்மை இணைய இணைப்பு அதிக ஆவணங்கள் பதிவு செய்யப்படும் 100 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு 2 MBPS வேகத்திலிருந்து 4 MBPS வேகத்திற்கு ஏற்கனவே தர மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது கூடுதலாக 200 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு 2 MBPS வேகத்திலிருந்து 4 MBPS வேகத்திற்கு தர மேம்பாடு செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை விரைவாக மையக்கணினிக்கு மேலேற்றம் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இச்சுற்றறிக்கையினை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலை பதிவு அலுவலர்கள்/சார்பதிவாளர்கள் தொடர்புடைய மாவட்டப் பதிவாளர்களுக்கும், மாவட்டப்பதிவாளர்கள், தொடர்புடைய துணை பதிவுத்துறை தலைவர்களுக்கும், அனுப்பிடவும் துணை பதிவுத்துறை தலைவர்கள் இதனில் ஒப்புதல் கோர்வை செய்யப்பட்ட விபரத்தினை மட்டும் பதிவுத்துறை தலைவருக்கு அனுப்பிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

22/1/2026

பதிவுத்துறைத்தலைவர்

பக/22-01-2026

Verified RealEstate

பெறுநர்

1. அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள்,
2. சரக உதவி பதிவுத்துறை தலைவர்கள்,
3. அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்(நிர்வாகம்) & (தணிக்கை)
4. அனைத்து சார்பதிவாளர்கள்

நகல்:-

முக்கிய ஆணைக்கோப்பு.

Verified RealEstate ™

Verified RealEstate™